**இராஜபாளையம் நகராட்சி**

**16.05.2022**

**திருவள்ளுவர் ஆண்டு 2052 பிலவ வருடம் வைகாசி மாதம் 2 ம்தேதி 2022 ம் வருடம் மே மாதம் 16ம் தேதி திங்கள்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்ட மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை - திருமதி.எ.அ.சு.பவித்ரா ஷ்யாம் நகர்மன்றத்தலைவர்**

**1) வருவாய் வட்டாட்சியர் , இராஜபாளையம் அவர்களின் ந.க.எண்.அ5/4248/2021 நாள் – 10.05.2022 ம் தேதிய கடிதத்தில் இராஜபாளையம் நகரம் வார்டு A பிளாக் எண் . 1 புல எண் . 13 விஸ்தீரணம் – 0.7050.0 ச.மீ சர்க்கார் புறம்போக்கு புளியந்தோப்பு சதுரக்கிணறு இடத்தில் புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகக்கட்டிடம் அமைக்க அனுமதித்து தீர்மான நகல் இயற்றி தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடமானது நகரளவு ஆவணங்களில் வருவாய்துறைக்கு சொந்தமான சர்க்கார் புறம்போக்கு புளியந்தோப்பு சதுரக்கிணறு என தாக்கலாகி உள்ளது. எனவே வருவாய் துறைக்கு சொந்தமான இராஜபாளையம் நகரம் வார்டு A பிளாக் எண் . 1 புல எண் . 13 விஸ்தீரணம் – 0.7050.0 ச.மீ இடத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக்கட்டிடம் கட்ட அனுமதி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. எப்1/2081/2022.**

**அ.கு-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண் 112 அனுமதிக்கப்பட்டது.**

**2 ) இராஜபாளையம் நகராட்சி கோடை குடிநீர் தேக்கப்பகுதியில் அமைந்துள்ள 125 KV ஜெனரேட்டர் 3 எண்ணம் 62.5 KVA ஜெனரேட்டர் 2 எண்ணம் ஆகியவற்றில் ஏற்பட்ட பழுதுகள் சரிசெய்ய உத்தேச மதிப்பீடு தொகை ரூ.180000/- (ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அஃகு**

1) **அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண் 113 அனுமதிக்கப்பட்டது.**

3 ) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண் 19,20,28 மலையடிப்பட்டி பகுதிகளுக்கு நகராட்சி அலுவலாக வளாகத்தில் உள்ள தரைமட்ட தொட்டியில் 10HP மின் மோட்டார் பொருத்தி செந்தாமரை பிரஸ் சாலையில் அமைந்துள்ள 2 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மின் மோட்டார் stand by இல்லாத காரணத்தினால் தொடர்ந்து மின் மோட்டார் இயக்க முடியாமல் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட தொட்டியில் 10HP மின் மோட்டார் பொருத்தி தொடர்ந்து இயங்கி சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி தொகை ரூ.1.30 (ஒரு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தயார் செய்து மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ்ஃகு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குடிநீர் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 114 அனுமதிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
இராஜபாளையம் நகராட்சி